ஒருங்கிணைந்து குரல் கொடுக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அரசியல் கட்சிகள், பல்வேறு இயக்கங்கள், மாணவர்கள் எல்லாரும் குரல் கொடுக்கிறார்கள். அப்படியானால், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுப் பிரச்சினையாக, தமிழர்களுடைய குரலாக ஒலிக்க வேண்டும்; அதற்கு அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும்: இதை வேறுபடுத்தி, பிரச்சிணையாகப் பார்க்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பேசுகிறீர்களா, அல்லது அவர் பேசுகிறாரா? (குறுக்கீடு) சரி, அவர் பேசட்டும்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், மாண்புமிகு பெரியவர் சுதர்சனம் அவர்கள் பேச எழுந்தவுடன், சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், 'உட்காருங்கள், உட்காருங்கள் தலைவர் அவர்கள் பேசப் போகிறார்கள்' என்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவருக்கு யார் தலைவர் என்பது எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கட்சித் தலைவர். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் என்று சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) மற்றவர்களைப் பார்த்து, 'உட்காருங்கள், உட்காருங்கள்' என்றீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No, No. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, உங்கள் கட்சியின் தலைவர் பேசப் போகிறார் என்று நான் சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: அப்படி நீங்கள் சொல்லவில்லை.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் இந்த zero hour-ல் யார், யார், என்னென்ன பிரச்சினைகளைப் பேச ஆரம்பிக்கின்றார்களோ, அந்தப் பொருளை நீங்கள் புரிந்துகொண்டு... (குறுக்கீடு)

2008 நவம்பர் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: சொல்லிவிடுகிறேன். யார் பிரச்சினையை எழுப்புகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, பொருளைப் புரிந்துகொண்டு, 'இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும், ஆய்விலே இருக்கிறது' என்று ஏதாவது சொன்னால், அவர்கள் பேசாமல் உட்கார்ந்துவிடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, thanks for your suggestion. உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: தேவையில்லாமல் 40 நிமிடங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: இருக்கிறது. ஏன் வெளியே சென்றோம் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா நாங்கள்? மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 30-10-2008 அன்று தேவர் திருமகனாருக்கு நினைவஞ்சலி செலுத்த பசும்பொன் கிராமத்திற்குச் சென்றபோது நடைபெற்ற கொலை வெறித் தாக்குதல் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தேன்? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) One minute, கேளுங்கள், ஒரு subject-ஐச் சொன்னார்கள். அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறோம் என்று சொல்கிறார். மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்ன மாதிரி அவர் feel பண்ணி, அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்கிறார். நீங்கள் different subject-க்குப் போகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் என்ன சொல்கிறேன் என்றால், இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். அது சம்பந்தமாக அவர் சொல்ல வருகிறார். நீங்கள் வேறு subject-க்குப் போகிறீர்கள். அடுத்த தடவை பேசுங்களேன். (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: ஒரு கட்சிக்கு, எத்தனை பேருக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பீர்கள்? தெரியாமல்தான் கேட்கிறேன், சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். திரு. செங்கோட்டையன் பேசினார், அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாறுபட்ட கருத்து கிடையாது. உங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) அது என்னுடைய discretion. முதலில் அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பன்னீர்செல்வம் கேட்கிறார், நீங்கள் எப்படி, யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று. இந்த அவையில், யார், யாருக்கு, எத்தனை பேருக்கு, எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சட்டமன்றத் தலைவருக்குரிய முழு உரிமை. அதிலே கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே, அவையை சுமுகமாக நடத்த, ஒரே கட்சியிலே இரண்டு பேரையும் கூப்பிடலாம்; ஒரு கட்சியைக் கூப்பிடாமலும் இருக்கலாம். அது அவைத் தலைவருடைய முழுப் பொறுப்பு. அதை நீங்கள் கேட்க முடியாது. ஆனால், உங்கள் ஆட்சியில் யாரையுமே கூப்பிடாமல் ஒரு காட்டு தர்பார் நடத்தினீர்களே, அப்படி அல்ல இது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: One minute, நீங்கள் உட்காருங்கள். திரு. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு subject–க்குள்ளே போகிறீர்கள். நான் அவரை பேசச் சொல்லப் போகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையைப் பொறுத்த அளவிலே, யாரைப் பேசக் கூப்பிடவேண்டும், யாரை பேசக் கூப்பிடவேண்டாம் என்று நான்தான் முடிவெடுக்கவேண்டும். நீங்கள் சொல்லி நான் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம் அவர்கள் ஏற்கெனவே முதலிலே ஒரு பிரச்சினையை எழுப்பி வெளிநடப்புச் செய்து, மறுபடியும் உள்ளே வந்திருக்கிறார்கள்.

2008 நவம்பர் 11] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதற்கிடையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சித் தலைவர்கள் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அவர்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கேட்கிறார். அவருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அந்தப் பிரச்சினை முடிந்ததற்குப் பிறகு, தேவைப்பட்டால் மறுபடியும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர் சம்பந்தமாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொன்னதற்குப் பிறகு உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் அந்த subject-க்குள்ளே போகமாட்டேன் என்கிறீர்களே? நீங்கள்தான் முதலிலேயே ஒரு prejudiced mind-உடனேயே அல்லவா வருகிறீர்கள்?

6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சித் தலைவர்கள், இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும் என்று இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதிலே காங்கிரஸ் பேரியக்கத்திலும் மாற்றுக் கருத்து யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை காங்கிரஸ் கட்சி ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, இன்றைக்கு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசானது பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறது. அப்படிப் பல்வேறு காரியங்கள் செய்திருப்பதன் பயனாக, அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்களுக்கு மத்திய அரசு 800 டன் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் எதிர்பார்க்காமல் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு நிதி வசூல் செய்து அதன்மூலமாக அவர்களுக்கு வேண்டிய உணவும், உடையும், இந்திய, தமிழக அரசின் சார்பாக